**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்</u>**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சிராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2026–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 18–ஆம் நாள், சனிக்கிழமை

**<u>இ.ம.எண். 8/2026 இன் அ.வ.எண்.202/2014</u>**

**<u>CNR No. TNSA13-000127-2014</u>**

1. மணிவேல்
2. ஜோதி
3. சின்னபொண்ணு
4. வள்ளி
5. வசந்தா . . . மனுதாரர்கள்/1, 3 முதல் 6 பிரதிவாதிகள்

/எதிராக/

மணி . . . எதிர்மனுதாரர் /வாதி

இம்மனுவின் மீதான விசாரணையானது, 18.04.2026–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.தயாளன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இம்மனுவுடன் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்று குறியீடு செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம்

கட்டளை 8 விதி 1(A)3 மற்றும் பிரிவு 151ன் படி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

2. **<u>மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :</u>**

மனுதாரர் இம்மனுவில் 1ம் மனுதாரர் என்றும், வழக்கில் 1ம் பிரதிவாதி என்றும், இம்மனுவை தனக்காகவும், மற்ற மனுதாரர்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளதாகவும், வாதி இந்த தாவாவை மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா சொத்தை விளக்க வேண்டி தாவா குடியிருப்பு வீட்டின் இயற்கை தோற்றத்தை படம் பிடித்து சமூகம் நீதி மன்றத்தில் தாக்கல் செய்வதாகவும், எனவே போட்டோவையும், அதற்கான ரசீதையும், 65(B) சான்றினையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், எனவே காலதாமதமாக தாக்கல் செய்யும் தாவா சொத்தின் குடியிருப்பு வீட்டின் போட்டோவை ஏற்று மனுதாரர் தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார். வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு விசாரணை முடிந்துள்ள நிலையில் தற்போது தாவா சொத்திற்கு சம்மந்தமில்லாத புகைப்படங்களை ஒப்படைத்து பிரதிவாதிகள் தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுருப்பது சட்டப்படி ஏற்கக்கூடியதல்ல, எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?

5. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தாவா குடியிருப்பு வீட்டின் இயற்கை தோற்றம் அடங்கிய புகைப்படங்கள், அதற்குண்டான ரசீது, 65(B)ன் கீழ் வழங்கிய சான்று ஆகியவற்றை ஏற்று தனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மாறாக எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாவா சொத்திற்கும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்யும் புகைப்படங்களுக்கும் தொடர்பில்லை என்றும், மேலும் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிவடைந்துள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என ஆட்சேபனை செய்துள்ளார்கள்.

எதிர்மனுதாரர்/வாதிக்கு மனுவில் கோரப்பட்டுள்ள ஆவணங்கள் தொடர்பாக குறுக்கு விசாரணை செய்து கொள்ள உரிமை உண்டு என்பதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும், நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிப்பதே உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. தீர்வு

இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 18–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2026.04.18 17:56:43 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

1. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.04.18 17:56:53 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம. எண். 8/2026 இன்
அ.வ. எண். 202/2014
நாள் : 18.04.2026